# அகரம்தென் முதல்நிலை ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

## புனிததோமையார்மலை

முன்னிலை : **C.K. ஜெகதீஸ்வரன்** M.A.,

க.உ.எண் 35 / 2025 - 2026 நாள் 3/9/2025

P.P.No: 296 / 25/8/2025

பொருள் : மனைப்பிரிவு / மனை உட்பிரிவு - புனித தோமையார்மலை ஊராட்சி ஒன்றியம் அகரம்தென் ஊராட்சி - ச.எண் 35/1 A1 TO A5 மனைப்பிரிவு / மனை உட்பிரிவு அனுமதி வழங்குதல் - தொடர்பாக.

(முத்திரை: செங்கல்பட்டு மாவட்டம் புனிததோமையார்மலை ஊராட்சி ஒன்றியம் - அகரம்தென் முதல்நிலை ஊராட்சி)

பார்வை : 1. சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம், சென்னை - 7. அவர்களது கடித எண் 1/23845/97 நாள் 08/98

2. ஆணையாளர், புனிததோமையார்மலை ஊராட்சி ஒன்றியம் அவர்களின் ப.மு.எண். 1448 / 2025

**உத்திரவு :**

பார்வையில் கட்டிய கடிதத்துடன் பெறப்பட்ட வரைப்படங்கள் பரிசீலிக்கப்பட்டு சுற்றியுள்ள மனைகள் சாலைகளுக்கு ஏற்ப திருத்தப்பட்டு ஒதுக்கீட்டின் கீழ்கண்ட கட்டிட மற்றும் மனைப்பிரிவு / மனை உட்பிரிவு விதிகளுக்கு உட்படுத்தி ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

## நிபந்தனைகள்

1. மனைகள் மற்றும் தெருக்கள் அங்கீகரிக்கப்பட்ட வரைப்படம் ப.மு 1448 / 2025ன்படி எல்லைக் கற்களால் வரையறுக்கப்பட வேண்டும். மனைப் பிரிவிற்குள் வரும் தெருக்கள் அனைத்தும் சரளைக் கற்களைக் கொண்டு மனுதாரர்கள் நிர்வாகம் அதிகாரியினால் நிர்ணயிக்கப்படும் மட்டத்திற்கும் அகலத்திற்கும் அமைக்கப்பட வேண்டும். அதோடு தகுந்த சிறுபாலங்கள் சாக்கடை வடிக்கால், துப்புரவு, தெருவிளக்கு முதலிய வசதிகளும் மனுதாரர் அமைத்தர வேண்டும் மனையின் அளவுகளில் அமைப்பில் மாற்றங்கள் செய்வதோ அல்லது வரையறுக்கப்பட்ட பொது உபயோகத்திற்கான இடங்களில் மாறுதல் செய்வதோ கூடாது.

2. தெரு முனையில் அமையும் மனைகளில் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைப்படத்தின்படி திருப்பத்தோடு அமைக்கப்பட வேண்டும்.

3. அங்கீகரிக்கப்பட்ட வரைப்படத்தில் விடப்பட்டுள்ள எந்த ஒரு மனையையும் பொது காரியங்களுக்காக தேர்வு செய்யப்பட்ட மனைகள் தவிர குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தவேண்டுமல்லாத கடை, பண்டக சாலை மற்றும் குடியிருப்பு அல்லாத குடியிருப்பைச் சொந்த உபயோகத்திற்கில்லாத கட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்தக் கூடாது.

4. எந்த ஒரு மனையிலும் தனித்தொரு குடியிருப்பு மட்டுமே கட்டப்பட வேண்டும். தவிர எக்காலத்திலும் தனிப்பட்ட மனைகளில் அங்கீகாரிக்கப்பட்ட அளவுகளையோ அமைப்பையோ மாறுபடுத்தும் வகையில் எந்த மனையும் திருத்தி அமைப்பதோ உட்பிரிவளிப்பதோ உபயோகத்திற்கு பயன்படுத்தக்கூடாது.

5. அங்கீகாரிக்கப்பட்ட வரைப்படத்தில் காட்டப்பட்டுள்ள தெருக்களுக்கு கட்டிட வரம்பு 10 அடிக்கு குறையாமல் இருக்க வேண்டும். மனையின் எல்லைக்குள் கட்டிட வரம்புக்குட்பட்ட நிலப்பகுதியின் தெருவில் உயர் மட்டத்தில் இருந்து 5 அடி உயரத்திற்கு மேற்படாத சுற்றுச்சுவர் அல்லது வேலை தவிர வேறு எந்த கட்டிடமோ சுவரோ கட்டக்கூடாது

6. மனையின் பின்புற எல்லைக்குள் கட்டிடத்திற்கும் இடையில் மனையில் மொத்த அகலத்திற்கும் வியாபிக்கின்ற வகையில் குறைந்தது 15 அடி அளவு உள்ள திறந்தவெளி இருக்க வேண்டும். இந்த பின்பக்கத் திறந்தவெளியில் கிணறு, மல அறை, எருக்குழி, மாட்டுத்தொழுவம், உந்துவண்டியை நிறுத்த கொட்டகை போன்றவை அல்லது அவைபோன்ற குடியிருப்பு அல்லாது ஆனால் அதைச் சார்ந்த கட்டிடங்கள் மட்டுமே அனுமதிக்கலாம். ஆனால் அக்கட்டிடங்கள் மொத்தமாக பின் எல்லையில் நிலத்தின் மூன்றில் ஒரு பாகத்திற்கு மேற்படாமலும் மனையின் பின்பக்க.........................பாகத்திற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

7. மனையின் பரப்பின் 50 சதத்திற்கு மேல் கட்டிடம் கட்டக்கூடாது.

8. கடக்கால் போடத் தேவையான அளவிற்கு அதிகமாக தரையை சமப்படுத்த வேண்டும். நிலச்சரிவை நேர் செய்யவோ, மனையிலிருந்து மண்தோண்டி எடுத்த பள்ளங்கள் ஏற்படுத்தக்கூடாது.

9. மனையின் சொந்தக்காரர்கள் மேற்படி வீடு கட்டும் திட்டங்களுக்கு உட்படுவதாக எழுத்து மூலமாக சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய அதிகாரியிடம் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். மனைகள் விற்பவரையும் மற்றும் வாக்குபவரையும் கட்டுப்படுத்தும் வகையில் சட்டத்திட்டங்கள் விற்பனைப் பத்திரங்கள் பகுதியாக சேர்க்கப்பட வேண்டும்.

10. அங்கீகாரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைப்படம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

சி.K. [signature]
தலைவர்
அகரம்தென் ஊராட்சி
அகரம்தென் முதல்நிலை ஊராட்சி
புனிததோமையார்மலை ஊராட்சி ஒன்றியம்

[signature] 3/8/25

இணைப்பு - மனைபிரிவு வரைப்படம்

பெறுநர்.

திரு./திருமதி. T. சின்னசாமி
.......... சேலையூர்
.......... 48
..........

Do not waste water, use it economically. Original

# Agaramthen Village Panchayat, Thomas Malai Block, Chengalpattu District

## Miscellaneous Receipt

Receipt Number : 2025-2026/35/9/1/7/115

Date : 03-09-2025 16:44

Name of the Payer : T Murugantham

Payer Mobile Number : 7299623687

Mode of Payment : Demand Draft

| Demand No | Major Head | Minor Head | Receipt Detail | Amount (₹) |
|---|---|---|---|---|
| 1151770 | Fees | Planning permit (Planning permit) | sub division planning in agaramathen panchyat | 59,096 |
| | | | Total | **59,096** |

Rupees(₹) : Fifty-Nine Thousand and Ninety-Six Only

Panchayat Secretary
Agaramthen Village Panchayat

ஊராட்சி செயலர்
அகரம்தென் ஊராட்சி மன்றம்
சென்னை - 126.

Executive Authority/
Village Panchayat President
Agaramthen Village Panchayat

தலைவர்
அகரம்தென் ஊராட்சி

*This is Computer Generated Bill. No Signature Required.

வாய்மையே வெல்லும்